

திருநெல்வேலி மாவட்டம், வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் (27.10.2023) நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான பரிவர்த்தனை அட்டைகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள். உடன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜ[6], மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் மற்றும் அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் உள்ளனர்.



திருநெல்வேலி மாவட்டம், வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் (27.10.2023) நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாநகராட்சி மற்றும் ஊராட்சியில் தூய்மை பணிகளை மேற்கொள்வதற்காக தூய்மைப்பணி வாகனங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். உடன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜ[6], மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் மற்றும் அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் உள்ளனர்.



திருநெல்வேலி மாவட்டம், வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் (27.10.2023) நடைபெற்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர ஸ்கூட்டரினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள். உடன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜ[6], மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் மற்றும் அரசு அலுவலர்கள், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் உள்ளனர்.



திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில், சாதிய நச்சால் ஏற்பட்ட தாக்குதலில் பாதிப்புக்குள்ளான பள்ளி சிறுவன் மற்றும் சிறுமி தொடர் சிகிச்சையின் பயனாக குணமடைந்துள்ளனர். அந்தச் சிறார்களையும் அவர்களது குடும்பத்தாரையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நெல்லையில் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அவர்களுக்கு சிறப்பாக மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர்களை பாராட்டினார். மேலும், அந்த சிறாரின் குடும்பத்தாருக்கு, அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் வீடு வழங்குவதற்கான ஒதுக்கீட்டு ஆணையை அளித்தார். அச்சிறாரை நெல்லையில் உள்ள பள்ளியில் சேர்ப்பதற்கான மாறுதல் ஆணையையும், அவர்களின் தாயாருக்கு நெல்லையில் உள்ள சத்துணவு மையத்தில் பணிபுரிவதற்கான பணி மாறுதல் ஆணையையும் வழங்கினார்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைப்படி, தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு நூலகம் என அமைக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிக்கான நூலகத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.






சேலத்தில் வரும் டிசம்பர் 17 அன்று நடைபெறவுள்ள இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டுக்கான பணிகளை ஒருங்கிணைக்கச் செய்யும் வகையில் திருநெல்வேலி கிழக்கு மற்றும் மத்திய மாவட்ட இளைஞர் அணிச் செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச்செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்.